# தேவனுடைய உண்மையான மிகச்சிறந்த சித்தம்

## 3.2 பிறரை ஏற்றுக்கொள்ளுதல்




**வேத வசனம்:** **பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக்கடவோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது. அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.**
*1 யோவான் 4:7*

**அறிக்கை:** **தேவனின் அன்பு நான் வெறுக்கிறவர்களையும் நேசிக்க எனக்கு உதவுகிறது.**



**சத்தியம்:** முதலாவதாக தேவன் நம்மில் அன்பு கூர்ந்ததால் நாம் அவரை நேசிக்கிறோம்.

**கேள்விகள்:** *1. சகேயுவை ஏன் அனைவரும் வெறுத்தனர்?*
*(அவர் ஏமாற்றி அதிக வரிபணத்தை வசூலித்தார்)*
*2. இயேசு அவரை எவ்விதம் நடத்தினார்?*
*(நேசித்து ஏற்றுக்கொண்டார்)*
*3. சகேயு எவ்விதம் மனம் மாறினார்?*
*4. எப்படிப்பட்ட மனிதரை நீ வெறுக்கிறாய்?*

### வேதப் பகுதி: யோவான் 4:7-21, 8:1-11

**பாடம்** **1. அன்புத் தாழ்ச்சியான உலகம்:** இந்த உலகம் முழுவதும் தேவனுடைய பாசமுள்ள தயவால் நிறைந்திருப்பதாக வேதப்புத்தகம் குறிப்பிடுகிறது. ஆனால் உண்மையில் உலகம் பாவத்தால் தேவனுடைய மகிமையை இழந்துவிட்ட நிலையிலேயே காணப்படுகிறது. ஆகையால் தான் மனிதருக்கிடையில் அவ்வப்போது பிரச்சனைகளை நாம் காண்கிறோம். அதுபோல "நீ கேவலமானவன்" "உன் செயல்கள் பயனற்றவைகள்" என்பன போன்ற மனதைக் காயப்படுத்தும் பேச்சுக்களை ஒருவருக்கொருவர் பேசுவதையும் கேட்கிறோம். (ரோமர் 3:23)

**2. சுய தேடுதலே மனித சுவாசம்:** சுயநலமும், தன்னை மட்டுமே காத்துக்கொள்ள முயலுவதும் தான் மனிதனுடைய பொதுவான இயல்பு. இது நம்மில் அநேகருக்கு உண்டு. **ஒரு கதை:** அரவணைப்புத் தேவைப்படும் குழந்தை ஒன்று இருந்தது. அதற்கு இன்னும் தெளிவாகப் பேசவும் வரவில்லை. அவனுடைய அத்தை அவன் கைகளில் வைத்திருக்கும் ஒரு பொம்மையைக் கேட்கும்போது, அவன் அந்தப் பொம்மையைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டு அடுத்தக்கைகளால் தன் அத்தைக்கு டாடா காட்டினான். மனிதருக்குச் சுயனலம் இல்லாதிருந்திருக்கும் என்றால் அந்தக் குழந்தை என்ன செய்திருக்கும்? வேதப்புத்தகமும் இறுதி நாட்களில் நடக்கப்போகும் சில காரியங்களைத் தீர்க்கதரிசனமாகக் குறிப்பிட்டிருக்கிறது. அதாவது, கடைசிகாலங்கள் பொல்லாதவைகளாக இருக்கும். மனிதர் தனக்கு லாபமானவைகளையும் தனக்குப் பிரியமானவைகளையும் மட்டுமே செய்வார்கள். (2 தீமோத்தேயு 3:2)

**3. என்னைப்போலப் பிறரையும் நேசிக்க:** நம்முடைய தற்போதைய அவசர காலங்களில் நாம் பிறர்மீது அக்கறை அற்றவர்களாக காணப்படுகிறோம். குறிப்பாக நாம் விரும்பாதவர்களைக்குறித்துச் சிறிதும் கவலைப்படுவது இல்லை. ஆனால் அதற்கு முற்றும் முரணாக இயேசு கிறிஸ்து சுயநலமற்ற அன்பையும், அளவற்ற அன்பையும் வெளிப்படுத்தினார். மனிதரால் புறக்கணிக்கப்பட்டவர்களையும், விரும்பத்தகாதவர்களையும் கூட அவர் நேசித்தார். "வசனம்" என்று கர்த்தர் சொன்னார். (யோவான் 13:3)

**4. அன்பு தேவனிடத்திலிருந்து வருகிறது:** நாம் ஒருவரை ஒருவர் நேசிக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். "வசனம்". அன்பு தேவனிடமிருந்து வருகிறது. ஆகையால் தான் நாம் தேவனுடைன அன்பைக்கொண்டு ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம். நாம் அநேகருடைய வாழ்வைத் தொடும் அளவு சிறந்த அன்புடையவர்களாக இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். (1 யோவான் 4:20)

**முடிவுரை:** தேவன் அன்பாகவே இருக்கிறார். நாம் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு ஒருவருக்கொருவர் அன்புள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பது தேவனுடைய சித்தம். அதன் விளைவாகப் பிறர் நம்மைக் கர்த்தருடைய சீஷர்களாக ஏற்றுக்கொள்ளுவார்கள்.

**ஜெபம் / அழைப்பு:** **இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.**